சுருக்கம்

கல்லூரிக் கல்வி– தமிழகத்தில் செயல்பட்டு வரும் 68 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் – உள்கட்டமைப்பு வசதிகளை ரூ.210.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த, நிர்வாக அனுமதியும் 2017–18 ஆம் நிதியாண்டுக்கு ரூ.105.39 கோடி மற்றும் 2018–19–ஆம் நிதியாண்டுக்கு ரூ.104.61 கோடி நிதி ஒப்பளிப்பும் அனுமதித்து–ஆணைகள் வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (டி1) துறை

அரசாணை (நிலை) எண்.294

நாள்: 16.10.2017
திருவள்ளுவர் ஆண்டு 2048
ஹேவிளம்பி, புரட்டாசி 30
படிக்கப்பட்டவை:

கல்லூரிக்கல்வி இயக்குநரின் கடித எண்.18874/ஜெ3/ 2013, நாள்: 27.07.2017.

ஆணை:

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 19.6.2017 அன்று சட்டப்பேரவையில் விதி 110ன் கீழ் பின்வரும் அறிக்கையினை வெளியிட்டுள்ளார்:-

“43 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகங்கள், கழிப்பறைகள், ஆசிரியர் ஓய்வறைகள், மாநாட்டு அறைகள், கூட்டரங்கங்கள், கூடுதல் அறைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், 210.00 கோடி ரூபாய் செலவில் இரண்டாண்டுகளில் முடிக்கப்படும் என்றும், இந்த 43 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கட்டப்படும் கட்டடங்கள், மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை குறிக்கும் வகையில் “புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடங்கள் ” என்ற பெயரில் அழைக்கப்படும். இதற்கென, முதற்கட்டமாக இந்த ஆண்டு ரூ.105 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். மீதமுள்ள 105 கோடி ரூபாய் அடுத்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்படும்”.

2. பார்வையில் படிக்கப்பட்ட கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் கடந்த ஆறு ஆண்டுகளில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மொத்தம் 961 கூடுதல் பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன எனவும், இப்பாடப்பிரிவுகளுக்கு வகுப்பறைகள் ஏதும் கட்டப்படவில்லை எனவும், இதனால், மாணாக்கர்களின் கல்வி நலனை பாதுகாக்கும் வகையில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் கட்ட வேண்டிய அவசியம் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற விதி 110–ன் கீழ் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டவாறு ரூ.210.00 கோடி (ரூபாய் இருநூற்று பத்து கோடி மட்டும்) 68 அரசு கல்லூரிகளில் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் கட்டுவதற்கான திட்ட மதிப்பீட்டினை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார். மேலும், இக்கட்டிடங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்காண் கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு ஆய்வு செய்து, தமிழகத்தில் செயல்பட்டு வரும் 68 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 862 வகுப்பறை கட்டடங்கள் மற்றும் 172 ஆய்வகங்களுக்கான கட்டடங்கள் கட்ட ரூ.210 கோடிக்கு (ரூபாய் இருநூற்று பத்து கோடி மட்டும்) நிர்வாக ஒப்பளிப்பும், 2017–2018 ஆம் நிதியாண்டில் இணைப்பு–I-ல் கண்டவாறு 24 கல்லூரிகளில் ரூ.105.39 கோடி (ரூபாய் நூற்று ஐந்து கோடியே முப்பத்தொன்பது இலட்சம் மட்டும்) செலவிலும், 2018–19 ஆம் நிதியாண்டில் இணைப்பு–II-ல் கண்டவாறு 44 கல்லூரிகளில் ரூ.104.61 கோடி (ரூபாய் நூற்று நான்கு கோடியே அறுபத்தொரு இலட்சம் மட்டும்) செலவிலும் பணிகள் மேற்கொள்ளப்படும் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. 68 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு தேவைப்படும் வகுப்பறைகள், ஆய்வகங்களின் எண்ணிக்கை மற்றும் கல்லூரி வாரியாக ஒதுக்கப்பட்டுள்ள தொகை இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"4202 – கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு – 01 பொதுக்கல்வி– 203 பல்கலைக் கழக கல்வியும் உயர்கல்வியும் – மாநிலச் செலவினங்கள்– JB கட்டடங்கள்–தொழில்நுட்பக்கல்வி பிரிவால் நிருவகிக்கப்படுபவை – 16 பெரும்பணிகள்" (த.தொ.கு. 4202 – 01 – 203 – JB – 1603)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுத்துணை திட்டப் பணியாகும். இதற்கான சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வ.செ.பொ.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினைக் கணக்கிட்டு எதிர்பாராச்செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி விதிகள், 1963ன் இணைப்பில் உள்ள படிவம் "அ"வின் படி இவ்வரசாணையுடன் நிதித் (வ.செ.பொ.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2017–2018ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதித் (வ.செ.பொ.1) துறைக்கு அனுப்புமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு எண்.68/ADS(PK)/Fin(Edu-I)/2017, நாள்.16.10.2017 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1648 (ஆயிரத்து அறுநூற்று நாற்பத்தெட்டு) ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனீல்பாலீவால்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
பதிவாளர், அனைத்து பல்கலைக்கழகங்கள்.
சம்பந்தப்பட்ட மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்,
(கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
தலைமைப் பொறியாளர், தொழில்நுட்பக் கல்வி வட்டம், சென்னை–25,
மாநிலக் கணக்காயர், சென்னை–18
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், நிதித்துறை, சென்னை–9
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், உயர்கல்வித்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–I/வ.செ.பொ-1 / வ.செ.பொ–11)த்துறை, சென்னை –9.
இ.கோ./உதிரி

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்.

அரசாணை (நிலை )எண். 294, உயர் கல்வி (டி1)த் துறை, நாள் 16.10.2017க்கு

## இணைப்பு–I

## 2017 –18ம் ஆண்டில் எடுக்கப்பட வேண்டிய பணிகள்

| வ. எண். | இடம் | கல்லூரியின் பெயர் | வகுப்பறைகளின் எண்ணிக்கை | ஆய்வகங்களின் எண்ணிக்கை | நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்படும் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | வாலாஜாபேட்டை | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி | 30 | 5 | 620.00 |
| 2. | திருவாரூர் | திரு.வி.க. அரசினர் கலைக் கல்லூரி | 30 | 6 | 617.00 |
| 3 | சென்னை – 39. | டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி. | 30 | 5 | 900.00 |
| 4 | திண்டுக்கல் | எம்.வி முத்தையா அரசினர் மகளிர் கலைக் கல்லூரி | 22 | 4 | 480.00 |
| 5 | உடுமலைப்பேட் டை | அரசு கலைக் கல்லூரி | 20 | 1 | 384.00 |
| 6 | திருச்சி -23. | பெரியார் ஈ.வெ.ரா கலைக் கல்லூரி | 20 | 3 | 437.00 |
| 7 | திருச்சி – 22 | அரசு கலைக் கல்லூரி. | 20 | 2 | 403.00 |
| 8 | சேலம் – 8 | அரசு மகளிர் கலைக் கல்லூரி. | 20 | 2 | 408.00 |
| 9 | நாமக்கல் | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, | 20 | 5 | 486.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | தருமபுரி | அரசு கலைக் கல்லூரி, | 20 | 5 | 536.00 |
| 11 | திருத்தனி | அருள்மிகு சுப்புரமணியசாமி அரசு கலைக் கல்லூரி , | 16 | 3 | 392.00 |
| 12 | இராசிபுரம் | திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரி, | 16 | 2 | 330.00 |
| 13 | இராமநாதபுரம் | சேதுபதி அரசினர் கலைக் கல்லூரி , | 16 | 2 | 400.00 |
| 14 | புதுக்கோட்டை | மா.மன்னர் கலைக் கல்லூரி. | 16 | 3 | 356.00 |
| 15 | நாமக்கல் | நாமக்கல் கவிஞர் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, | 16 | 4 | 389.00 |
| 16 | மன்னார்குடி | ம.ரா. அரசு கலைக் கல்லூரி | 16 | 5 | 423.00 |
| 17 | குளித்தலை | அரசு கலைக் கல்லூரி | 16 | 3 | 356.00 |
| 18 | உதகமண்டலம் | அரசு கலைக் கல்லூரி. | 15 | 4 | 475.00 |
| 19 | பரமக்குடி | அரசு கலைக் கல்லூரி. | 15 | 2 | 330.00 |
| 20 | மதுரை | ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி | 15 | 5 | 400.00 |
| 21 | கும்பகோணம் | அரசினர் மகளிர் கலைக் கல்லூரி | 15 | 2 | 310.00 |
| 22. | கிருஷ்ணகிரி | அரசு கலைக் கல்லூரி | 15 | 6 | 437.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23. | சிதம்பரம் | அரசு கலைக் கல்லூரி | 15 | 2 | 320.00 |
| 24. | சென்னை – 5 | மாநிலக் கல்லூரி | 15 | 2 | 350.00 |
| | | மொத்தம் | | | 10539.00 |

சுனீல்பாலீவால்,
அரசு முதன்மைச் செயலாளர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சு. சுரேஷ்குமார்
16/10/17
பிரிவு அலுவலர்

அரசாணை (நிலை )எண். 294, உயர் கல்வி (டி1)த் துறை, நாள் 16.10.2017க்கு

## இணைப்பு –II

## 2018 –19ம் ஆண்டில் எடுக்கப்பட வேண்டிய பணிகள்

| வ. எண். | இடம் | கல்லூரியின் பெயர் | வகுப்பறைகளின் எண்ணிக்கை | ஆய்வகங்களின் எண்ணிக்கை | நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்படும் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை – 4 | இராணிமேரி கல்லூரி | 15 | 2 | 350.00 |
| 2. | கும்பகோணம் | அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி | 15 | 2 | 310.00 |
| 3. | சிவகங்கை | மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரி | 14 | 2 | 300.00 |
| 4. | விருத்தாசலம் | திரு. கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி | 14 | 3 | 324.00 |
| 5. | ஆத்தூர் | அரசு கலைக் கல்லூரி | 12 | 3 | 297.00 |
| 6. | பர்கூர் | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்) | 12 | 1 | 227.00 |
| 7. | சென்னை – 35 | அரசு ஆடவர் கலைக் கல்லூரி | 12 | 4 | 382.00 |
| 8. | கடலூர் | பெரியார் கலைக் கல்லூரி | 12 | 1 | 240.00 |
| 9. | மயிலாடுதுறை | த. ஞா. அரசினர் மகளிர் கலைக் கல்லூரி | 12 | 3 | 303.00 |
| 10. | பூலான்குறிச்சி | வ.செ.சிவ. அரசு கலைக் கல்லூரி | 12 | 1 | 237.00 |
| 11. | சிவகங்கை | அரசு மகளிர் கலைக் கல்லூரி | 12 | 2 | 274.00 |
| 12. | தஞ்சாவூர் | மன்னர் சரபோஜி அரசு கல்லூரி | 12 | 3 | 304.00 |
| 13. | தஞ்சாவூர் | குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி | 12 | 3 | 305.00 |
| 14. | திருநெல்வேலி | இராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி | 12 | 5 | 360.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15. | விழுப்புரம் | அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி | 12 | 2 | 280.00 |
| 16. | சென்னை | பாரதி மகளிர் கல்லூரி, வடசென்னை | 10 | 2 | 300.00 |
| 17. | கோயம்புத்தூர் | அரசு கலைக் கல்லூரி | 10 | 1 | 206.00 |
| 18. | கரூர். | அரசு கலைக் கல்லூரி | 10 | 3 | 265.00 |
| 19. | மேலூர் | அரசு கலைக் கல்லூரி | 10 | 3 | 260.00 |
| 20. | முசிறி | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி | 10 | 2 | 235.00 |
| 21. | பொன்னேரி | உலகநாத நாராயணசாமி அரசினர் கலைக் கல்லூரி | 10 | 2 | 322.00 |
| 22. | புதுக்கோட்டை | அரசு மகளிர் கலைக் கல்லூரி | 10 | 1 | 227.00 |
| 23. | சுரண்டை | அரசு கலைக் கல்லூரி | 10 | 2 | 220.00 |
| 24. | திருவண்ணா மலை | அரசு கலைக் கல்லூரி | 10 | 2 | 227.00 |
| 25. | வேலூர் | முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி | 10 | 2 | 240.00 |
| 26. | காரிமங்கலம் | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்) | 10 | 0 | 165.00 |
| 27. | செங்கல்பட்டு | இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக் கல்லூரி | 8 | 1 | 197.00 |
| 28. | சென்னை | காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி | 8 | 2 | 224.00 |
| 29. | கிருஷ்ணகிரி | அரசினர் மகளிர் கலைக் கல்லூரி | 8 | 1 | 162.00 |
| 30. | நிலக்கோட்டை | அரசு மகளிர் கலைக் கல்லூரி. | 8 | 2 | 220.00 |
| 31. | இராமநாதபுரம் | அரசு மகளிர் கலைக் கல்லூரி | 8 | 2 | 240.00 |
| 32. | சேலம் - 7. | அரசு கலைக் கல்லூரி | 8 | 3 | 266.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 33. | திண்டிவனம் | திரு.ஆ.கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரி | 8 | 2 | 206.00 |
| 34. | திருப்பூர் | சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி | 8 | 2 | 207.00 |
| 35. | திருப்பூர் | எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரி | 8 | 3 | 257.00 |
| 36. | சென்னை – 15 | கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் | 5 | 2 | 218.00 |
| 37. | செய்யாறு | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி | 5 | 1 | 137.00 |
| 38. | குடியேற்றம் | அரசு திருமகள் ஆலை கல்லூரி | 5 | 2 | 155.00 |
| 39. | காரைக்குடி | அழகப்பா அரசு கலைக் கல்லூரி | 5 | 1 | 124.00 |
| 40. | புதுக்கோட்டை | அரசு கல்வியியல் கல்லூரி | 5 | 2 | 150.00 |
| 41. | சென்னை | வெலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் | 4 | 2 | 169.00 |
| 42. | குமாரப்பாளையம் | அரசு கல்வியியல் கல்லூரி | 4 | 1 | 106.00 |
| 43. | ஒரத்தநாடு | அரசு கல்வியியல் கல்லூரி | 4 | 1 | 115.00 |
| 44. | வேலூர் | அரசு கல்வியியல் கல்லூரி | 4 | 2 | 148.00 |
| | | மொத்தம் | | | 10461.00 |

சுனீல்பாலீவால்,
அரசு முதன்மைச் செயலாளர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சு. சுரேஷ்குமார்
16/10/17

பிரிவு அலுவலர்